**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 85** **நாள்: 21.06.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு இலட்சம் ஸ்டிக்கர்கள் மூலம் கை கழுவும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக, சென்னை மாநகர் முழுவதும் கல்வி நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலகில் பெரும்பாலான நோய்கள் சுற்றுப்புற சுகாதாரம், தூய்மை மற்றும் தன் சுத்தம் போன்றவற்றை முறையாக கடைபிடிக்காமல் இருத்தலால் ஏற்படுகிறது. இதில் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையில், முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவுவதன் மூலம் 50% வயிற்றுப்போக்கு, 25% நிமோனியா காய்ச்சல், டைஃபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை, சாதாரணமான சளித்தொல்லை, சுவாச தொற்றுநோய்கள், பன்றிக்காய்ச்சல், காலரா, வயிற்றுப் பூச்சிகள், தோல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோயிலிருந்தும் பொதுமக்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக தண்ணீரை மட்டும் உபயோகித்து கைகளை கழுவுவதினால் நோய்க் கிருமிகளை அழிக்க முடியாது. சோப்பு உபயோகித்து 20 நொடிகள் முறைப்படி கை கழுவுவதினால் மட்டுமே நோய்க் கிருமிகளை அழிக்க முடியும். இதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் மே மாதம் 5ந் தேதி உலக கை கழுவும் தினம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, புதிதாக வடிவமைக்கப்பட்ட முறையாக கைகழுவும் நிலைகள் கொண்ட வண்ணப்படத்துடன் கூடிய இரண்டு இலட்சம் ஸ்டிக்கர்கள்

மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில் துப்புரவு அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவால் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், தேநீர் விடுதிகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள், திருமண மண்டபங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், அம்மா உணவகங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்நிறுவனங்கள் போன்ற இடங்களில் 21.06.2018 முதல் ஒரு வாரத்திற்குள் ஒட்டி, முறையாக கைகழுவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பெருநகர மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இன்று முதல் அனைத்து மண்டலங்களிலும் கை கழுவும் முறைகள் கொண்ட ஸ்டிக்கர்கள் ஒட்டி, விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இங்கு பயிலும் மாணவியர்களுக்கு முறையாக கை கழுவுவதினால் எவ்வாறு தொற்றுநோய்கள் வராமல் தடுக்க முடியும் என்று விளக்கப்பட்டு, செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. மாணவியர்கள் அனைவரும் முறையாக கை கழுவினர். இதனை தொடர்ந்து கடைப்பிடித்து தங்கள் வீட்டிலும், அருகாமையில் உள்ளவர்களிடம் எடுத்துக் கூறி, விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மண்டல அலுவலர் திரு.எம்.பரந்தாமன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், மண்டல சுகாதார அலுவலர், துப்புரவு அலுவலர், மாநகராட்சி அலுவலர்கள், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**